உ

சிவமயம்

கணபதி துணை

விநாயகர் புகழ் மாலை.

பதிப்பித்தவர் :

குன்றக்குடி சிவபூஜை


ஸ்ரீ ம. கா. ரெங்கநாத சுவாமிகள்.

பொருளுதவியவர் :

தேவகோட்டை திருவாளர்

அரு. வீர. அருணாசலஞ் செட்டியார்.

1941



சிவமயம்.

கணபதி துணை.

முகவுரை.

பூ உலகின்கண் தவத்தினல் கிடைக்கதது பெறுதற்கரிய இம்மானிடப் பிறவியேயாம். இப்பிறவியில் இறைவனைப் புகழ்ந்து பாடி வணங்குவது நல்வழியாம். அந்நன்னெறியையடைய அருட் பெருந்திறத்து அடியார்கள் அன்பு நெக்குருகித் திருவாய் மலர்ந்தருளிய செய்யுட்களை நியம பாராயணமாக தோத்திரஞ்செய்வது கடமையாகும். அவற்றுள் முன்னவனாய் வழிபாடு செய்யவேண்டிய தெய்வம் விநாயகமூர்த்தியேயாம். அம்மூர்த்தியின் திரு அவ

தாரம், நிக்கிரகா அநுக்கிரகம் முதலிய சரித்திரங்களையும் தத்துவார்த்தங்கள் நிறைந்த திரு அகவல்கள் மூன்றையும் விநாயகர் புகழ் மாலை என்ற சிறப்புப் பெயருடன் நமது சிவபூஜா துரந்தரர் ஸ்ரீ ம. கா. ரெங்கநாத சுவாமியவர்கள் அன்பின் பெருக்கால் சமர்ப்பித்துள்ளார்கள். இந்நூலை அன்பர்கள் படித்துத் திருவருளைப் பெற்றுய்யும்வண்ணம் பெரிதும் வேண்டுகிறேன்.

இவ்வுயரிய தோத்திர நூலை வெளியிடப்பொருளுதவி செய்த தேவகோட்டை உயர் திரு. அரு. வீர. அருணு சலஞ் செட்டியாரவர்களுக்கும் ஸ்ரீமத் விநாயகப்பெருமான் திருவருள் பாலிப்பாராக.

சேவு. மெ. மெய்யப்ப செட்டியார்.

உ

சிவமயம்

கணபதியின் திரு அவதாரம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகணபதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே

முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் உலகமாதா வாகிய உமாதேவியாரை நோக்கி நாம் செய்வித்த நந்தன வனத்தைப் பார்ப்போம் வருதி என்றார். உமாதேவியாரும் தக்கதே அருளிச்செய்தீர் நந்தனவனத்துக்கு நான் வருகின்

றேன் என்று கூறினார் வேதப்பொருளாயுள்ள கடவுள் உலக மாதாவாகிய தேவியாரோடு மிகுந்த பேரழகுடைய அந்நந்தனவனத்துக்குப்போய் அதனியல்புகளை அவரோடு கண்ணுற்று ஓவியங்களையுடைய ஒருமண்டபத்திற் சென்றார். உமாதேவியார் அதிலுள்ள ஓவியங்களின் அழகுகள் எல்லாவற்றையும் ஐம்புலன்களும் ஒருவழிப்படத் திருகண்களாற் பார்த்தார். பக்கத்தில் வருகின்ற சிவபெருமானுடைய ௨
ஆணையினாலே அம்மண்டபத்தினடுவே ஒரு பிரணவ எழுத்தே இரண்டு உருவுகொண்டு யானைகளின் வடிவாய்த் தோன்றி உமாதேவியார் காணும்படி புணர்ச்சியில் முயன்றது அதனை அத்தேவியார் கண்ணுற்று இஃதென்னையென்று எண்ணி சிவபெருமானை வணங்கி, பிரணவ எழுத்து யானைவடிவாய்ப் புணர்ச்சி செய்வது என்னை, யென்று வினவினார். சிவபெருமான் அவரை நோக்கி.

உமையே கேள். எவற்றிற்கும் மூலமாகிய பெருமை பொருந்திய பிரணவ எழுத்தானது நீ முன்பு இச்சித்துப் பார்த்தமையினால். இரண்டாகி யானையின் உருவுகொண்டு புணருகின்றது ஆகையால் உன்னுடைய பெருந்தகைமை யை நீயும் அறியாய் காட்சி மாத்திரத்தால் இதனைச் செய்தற்குக் காரணமாயுள்ள உன்னுடைய மாட்சிமையை யாமன்றி வேறியாவர் அறிய வல்லார், உன்னுடைய திரு
வருட்செய்கை வேதங்களுக்கும் எட்டாததாகும் என்று ௩
முகமனாகச் சொல்லியருளினார் அந்த யானைகள் இரண்டும் நிருமலமாகிய தமது புணர்ச்சியைவிட்டு முன்போலப் பிரணவ சொருபமாயின.

" அப்பொழுது ஐந்துகரங்களையும் மூன்று கண்களை யும் தொங்குகின்ற வாயினையும் சந்திரனைத்தரித்த செவ் வானம்போலுஞ் சடையினையும் மும்மதங்களையும் யானை

வதனத்தையும் உடைய ஒரு பாலகர் தோன்றியருளினர். அவர் மெய்யன்போடு தியானிக்கின்ற அன்பர்களுடைய அறிவுக்கறிவாயுள்ளவர், எங்கும் வியாபித்திருப்பவர், யாவராலும் அறியப்படாதவர், எவராலும் வணங்கப்படும் இயல்பினர். சிவபெருமான் இருவர் என்று சொல்லும்படி நின்றருள் செய்பவர் நான்கு வேதப் பொருளாயுள்ளவர், உலகிலுள்ளோருடைய அஞ்ஞானத்தையும் மனத் துன்பங்களையும் நீக்குதற்காக ஓர் அருளுருக்கொண்டு அவ 4
தரித்தவர் இவ்வியல்புடைய அப்பாலகர் வந்து, சிவபெருமான் உமா தேவியார் ஆகிய இருவருடைய திருவடிகளில் மெய்யன்பொடு நமஸ்கரித்தார், சிவபெருமானும் உமா தேவியாரும் அவரை எடுத்துத்தழுவி மார்போடணைத்துக் கருணை செய்தார்கள். சிவபெருமான் அவரை நோக்கி, யாவரேயாயினும் யாதொரு கருமத்தைச் செய்யத்தொடங்

குதற்குமுன் அது இடையூறின்றி முடிவுபெற வேண்டும்
என்று உன்னை வழிபடுவாராயின் அவர் கருத்தின்படி
அதனை முற்றுப்பெறச்செய்குதி, உன்னை முன்பு வழிபடா
மற் செய்வோருடைய கருமங்களுக்கு இடையூறு செய்
குதி, பிரமா விட்டுணு முதலிய தேவர்களுக்கும் மற்றை
ஆன்மாக்களுக்கும் நம்முடைய பூத கணங்களுக்கும் பிற
ருக்கும் அருளோடு நாயகனாயிருக்குதி, கயமுகன் என்னும்
அசுரனை வதைத்து விட்டுணுவினுடைய சாபத்தையும் ௫
நீக்கி வருதி, என்று அருளிச்செய்து, அவருக்குச் சேனை
களாகப் பூதர்களை உண்டாக்கிக்கொடுத்து உமாதேவி
யாரோடும் விநாயகக் கடவுளோடும் சோலையை நீங்கித்
திருக்கைலாச மலைக்குப்போய் விநாயகக் கடவுளை நோக்கி,
நீ நம்முடைய கோபுரவாயிலிலே நாயகனாயிருக்குதி, என்று
அன்பொடு அவரை அங்கே யிருத்தி தாம் உமாதேவியா

ரோடு கோயிலினுட் போய் வீற்றிருந்தருளினர், விநாயககக்கடவுள் கோயிலின் வாயிலிற்போய் பூத சேனைகள் யாவும் நெருங்கிச் சூழவும், திருநந்திதேவர் வந்து வந்தனை செய்யவும், பிரமா முதலிய தேவர்கள் வந்து வந்து வணங்கவும் மகிழ்வோடு வீற்றிருந்தார்.

பிள்ளையார் திரு அவதாரஞ் செய்த காலம் ஆவணி
மாதம் பூர்வபக்ஷம் சதுர்த்தி கூடிய சுபதினமாகும்-அன்று ௧
பிள்ளையார் சதுர்த்தி விரததினம்.

ஒருநாள் விட்டுணு சிவபெருமானைத் தரிசிக்கும்படி திருக்கைலாசமலைக்குப்போய்க் கோயிலின் முன்பு அணுகி திருநந்திதேவர் சிவபெருமானுடைய அநுமதிப்படி உள்ளே விடுப்பச்சென்று, அவருடைய திருவடிகளை வணங்கித் துதித்தார். மகாதேவர் அவரை இருக்கும்படி பணித்து ஒரு திருவிளையாடலை யுன்னி உமாதேவியாரை

நோக்கி, உமையே நாம் ஒன்று சொல்வோம், கேள். நீ நம்மோடு சூதாடு. நமக்குத்தோற்ருல் நீ அணிந்திருக்கின்ற ஆபரணங்களெல்லாவற்றையுந் தருதி, நம்மைவென்ருல் நம்மிடத்துள்ள சந்திரன் முதலிய பல அணிகலங்களேயும் கைக்கொள்ளுதி, என்ருர். உமாதேவியாரும் அதற்கிசைந் தார். விருப்பு வெறுப்பின்றி ஆன்மாக்களுடைய இரு வினைகளை முற்றெருருங்குணர்ந்து அவற்றிற்கேற்பத் தனு கரண புவன போகங்களேக் கொடுத்தருளும் சிவபெரு மான் விட்டுணுவை நோக்கி, நீ இதற்குச்சாக்ஷியா யிருப்பாய், என்று பணித்தார். அவர் நன்றென்று அதற் குடன்பட்டிருந்தார். சூழ்ந்து நிற்கின்ற ஆலால சுந்தரர் முதலாயினேர் பரமசிவனுடைய அனுமதிப்படி சூதாடு சருவியையும் ஆடுதற்குரிய பலகையையுங் கொண்டுவந் தார்கள். திருக்கைலாசபதி விட்டுணுவை நோக்கி, இக்

காய்களை முறையாகவை, என்று கூற அவர் வைத்தார்.
கடவுள் அம்மையாரை நமக்கெதிரே இருப்பாய் என்று
இருத்தி, தாம் முன்பு கவற்றை உருட்டினர். பின்பு
தேவியாரும் உருட்டினர் எவற்றினும் மேலோராகிய
அவர்களிருவரும் பஞ்சென்றும் பாலையென்றும் ஈரஞ்
சென்றும் அஞ்சென்றும் நடம் என்றும் துருத்தி என்றும்
வெடி என்றும் இஃது அடியென்றும் இது பொட்டை
யென்றும் இவைபோன்ற சூதாட்டத்திற்குறிய குழூஉக் ௮
குறிகளை எதிரெதிராய் அளவிலவாகச் சொல்லி கவற்றை
யெறிந்தும், கருவிகளை எதிரேறத்தள்ளியும் மகிழ்வோடு
விளையாடினர்கள்.

இவ்வாறு சூதாடும்பொழுது, யாது திருவிளையாட்டாலோ நாம் அதனை அறியோம். பரமசிவன் தம்மோடு விளையாடிய தேவியாருக்குத்தோற்று அவரை நோக்கி

உமையே உன் வலிமை நன்று, என்று நகைத்து, நீ நம்மை வென்றாயில்லை, தோற்றாய் இனி முன்பு ஒட்டியபடி உன்னுடைய மாலையையும் ஆபரணங்களையும் எமக்குத் தருதி என்றார் தேவியார். அதனைக்கேட்டு தாம் அக்கடவுளோடு வாதாடுதற்கு அஞ்சி, விட்டுணுவை நோக்கி, சாக்ஷியாயிருந்த நீ இதனைச்சொல்லுதி என்றார். விட்டுணு, சூதுவென்றவர் சிவபெருமானே என்றார். உமாதேவியார், நீ நல்ல உண்மையைச்சொன்னாய் உன் திறம் நன்று நன்று ௬ அவரைக்கோபித்து, நீ இதனைப் பாராதவனுமல்லை கண்ணனுமாயினை, பக்கத்திலிருந்தாய் என்று நீ அறியாததொன்றுமில்லை. எவராலும் அறியப்படாத முதல்வராகிய கடவுள் பொய் சொல்லினும் நீ இந்தப்பொய்யைச் சொல்லலாமோ உன் உடல் கரிதென்பர். நீ மனமுங்கரியாயோ, மாயையிலும் வஞ்சனையிலும் சிறந்த விட்டுணுவே இறுமாப்

பினால் இந்தப்பொய்யைச்சொன்னாயாதலால் நீ பாம்பாகக் கடவை, என்று சபித்தார். உடனே அவர் பாம்பாயினார்.

விட்டுணு அதுகண்டு கவற்சியுற்று சிவபெருமானுடைய பாதங்களை வணங்கி, இவ்வுரு அடியேனுக்கு எவ்வாறு நீங்கும், சொல்லியருளும், என்றார். பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் எனப்படும் பஞ்சபூதத்துவங்களாய் இவற்றிற்கு மேலாயுள்ள ஏனைய முப்பத்தொரு தத்துவங்களாய் எவற்றிற்கும் மூலகாரணமாய், நான்கு வேதப் பொருளாயுள்ள சிவபெருமான் விட்டுணுவை நோக்கி என்னிடத்துள்ள அன்பினால் நீ பொய் சொல்லி இப்பாம்புருவைப்பெற்றாய், நாம் உனக்கு வந்த இன்னலை நீக்குகின்றோம். நீ நீங்குவாய் தெக்ஷண திசையிலே தென்றேசத்திலே ஆலவனமென்று ஓரிடம் இருக்கின்றது. அதில் ஓராலமரமுளது அதனை நீயும் பார்த்ததுண்டே. இனி நீ

அங்கே விரைவிற்போய், அம்மரத்தின் அடியிலுள்ள பொந்தொன்றில் இச்சாபம் நீங்கும்படி பெருந்தவத்தைச் செய்தகொண்டிருக்குதி, அஞ்சாதே. நீ தவஞ்செய்திருக்குங்காலத்தில் நம்முடைய குமாரனாகிய விநாயகன் அங்கே வருவான். அவனை எதிர்கொண்டு தரிசிக்குதி அப்பொழுது உன்னுடைய இப்பாம்பு வடிவம் நீங்கும், என்று சொல்லியருளினார். விட்டுணு சிவபெருமானை வணங்கித் துதித்து, விடைபெற்றுக்கொண்டு திருக்கைலாசமலையை நீங்கி விரைந்துசென்று, பெரியோர்கள் வசிக்கின்ற தென்றிசையையடைந்து ஆலவனத்திற்போய், எண்ணில்லாத விழுதுகளையுடையதும் சந்திரமண்டலத்தை அளாவுவதும் பூவுலகமெங்கும் நிழல் பரப்புவதும் எழு காதம் அகன்ற அரையையுடையதுமாகிய மிகப்பெரிய ஆலமரத்தின் பொந்திற் புகுந்து தவஞ்செய்துகொண்டிருந்தார்.

உமாதேவியாருடைய சாபத்தினால் விட்டுணு பாம்பான சரித்திரத்தைச்சொன்னோம். இனிக் கயமுகாசுரனை மூத்தபிள்ளையாராகிய விநாயகக்கடவுள் வென்ற கதையை சொல்வாம்.

முன்னே கயமுகாசுரனுடைய ஏவலினால் நொந்து மனம் வருந்திய இந்திரன் முதலிய தேவர்கள் யாவரும் விநாயகக்கடவுள் திருவவதாரஞ்செய்தமையை யறிந்து மகிழ்ச்சியுற்று திருக்கைலாசமலையையணுகி அவருடைய திருவடிகளை வணங்கித்துதித்தார்கள். அவர் கருணைசெய்து உங்களுடைய குறை யாது சொல்லுங்கள் என்றார். அதனைக்கேட்ட இந்திரன் சுவாமி முன்னாளிலே சிவபெருமானிடத்தில் எல்லையில்லாத வரங்களைப்பெற்ற கயமுகாசுரன் என்பவன் எங்களை மிகவுந்துன்பஞ்செய்தான். அன்றியும் எங்களைப் பெருமை இழந்து நாடோ

றும் தன்னை வந்து வணங்கும்படி கற்பித்தான். அதனைச் செய்தோம் வேறும் எங்களுக்குப் புதிதாக ஒரு பணியையுங் கற்பித்தான். அஃதென்னையெனில் நாங்கள் தன்னிடத்துப்போகும்பொழுதெல்லாம் நெற்றியிற் குட்டிக் காதுகளைப் பிடித்துக்கொண்டு தாழ்ந்தெழும்படி சொன்னான். அத்துயரையும் பட்டுப்பட்டுப் பழியில் மூழ்கினோம். கோபத்தோடு அவன் சொல்லுகின்ற சொற்களை மறக்கப்பயந்து நமக்கு வரும் பழிகளையும் பொறுத்து நாணமுமின்றி இன்றுகாறும் அந்தக் குற்றேவலையும் செய்தோம். அவ்வசுரனுடைய உயிரையும், எங்களுடைய குறையையும் நீக்கும்படி தேவரீர் வருவீர் என்று பரமசிவன் எங்களுக்கு அருளிச்செய்தார். ஆதலால் உம்மை வந்தடைந்தோம். எங்களுடைய துன்பத்தை நீக்கியருளும் என்று மோதக முதலியவைகளை நிவேதித்து வழி

பட்டான். விநாயகக்கடவுள் அஞ்சற்க அஞ்சற்க கயமுகாசுரனைச் சங்கரித்து உங்களுடைய துன்பத்தை நீக்குவோம் என்று அருள்புரிந்தார். இந்திரனுந் தேவர்களும் நம்முடைய சிறுமையும் துன்பமும் நீங்கின. மறுமை இன்பங்களும் வந்தன. இனி நாம் பெறும் பேறுகள் யாவை என்று பேசி மகிழ்ச்சியுற்றார்கள்.

விநாயகக்கடவுள் கயமுகாசுரனைச் சங்கரிக்கத் திருவுளங்கொண்டு திவ்விய சிங்காசனத்தினின்றெழுந்து வாய்தலில் வந்து சூரியப்பிரகாசத்தையுடைய அசலன் என்பவனுடைய தோளின்மீது திருவடியைவைத்து ஏறிப் போருக்குச்சென்றார். பூதர்கள் வந்து சூழ்ந்து அவருடைய புகழ்களைச்சொல்லித் துதித்தார்கள், சாமரைகளை வீசினார்கள், குடைகளை ஏந்தினார்கள். பூக்களை தூவினார்கள், உடுக்கு தண்ணுமை முதலிய பல வாததியங்களை

இயம்பினார்கள். இந்திரனுந் தேவர்களும் கற்பகப்பூக்களை தூவி மிகுந்த மகிழ்ச்சியோடு அக்கடவுளைச்சூழ்ந்து போயினார்கள். விநாயகக்கடவுள் இவ்வாறு பூதசேனா வெள்ளங்களும் தேவர்களும் தம்மைச்சூழ்ந்துவரக் கய முகனுடைய மதங்கமாபுரிக்கெதிரிற்போயினார். அதனை ஒற்றர்கள் ஓடிப்போய்க் கயமுகனுக்குச்சொல்ல அவன் கோபமுற்று இருக்கைவிட்டெழுந்து ஆயுதங்களை எடுத் துக்கொண்டு தேரிலேறி வாத்தியங்கள் ஒலிக்கவும் கசரத துரகபதாதிகளாகிய ஆயிரம் வெள்ளம் சேனைகள் சூழவும் விரைவிற் புறப்பட்டு விநாயகக்கடவுளுடைய சேனைகளுக் கெதிரே வந்தான். பூதசேனைகளும் அசுரசேனைகளும் கைகலந்து ஆயுதங்களினாற் பெரும்போர் செய்தன. அசு ரர்கள் பூதர்களோடு எதிர்த்துநின்று போர் செய்து ஆற் றாதவர்களாய்ப் புறங்கொடுத்தோடினவர்களும் இறந்தவர்

களும் ஒளித்தவர்களுமாய் அழிந்தார்கள். கசரததுரகங்கள் அழிந்தன. இவ்வாறு அவுணசேனைகள் யாவும் அழியப்பூதர்கள் வெற்றியடைந்தார்கள். அதனைக் கயமுகாசுரன்கண்டு அக்கினிபோலக்கோபித்து வில்லை வளைத்தான். பூதர்கள் அவனை வந்து சூழ்ந்து போர் செய்தார்கள். கயமுகன் பாண மழைகளைச் சொரிந்து அவர்களுடைய உடம்புகளைத் துளைத்தான். அவர்கள் யாவரும் வருந்தி வலிமையிழந்து ஓடினார்கள் அதனைக்கண்ட இந்திராதி தேவர்கள் வருந்தினார்கள்.

பூதசேனைகள் புறங்கொடுத்ததை விநாயகக் கடவுள் கண்டு அசலனை நடத்தி, கயமுகாசுரனை அணுகினார். அவன் அங்குநின்ற தூதுவரை நோக்கி, இங்கே என்னோடு போர்செய்யும்படி வருகின்ற இவன் யார், என்று வினவ, அவர்கள், மூன்று, கண்களையும் ஐந்து கரங்களையும் யானை

முகத்தையுமுடையராய் ஒரு பூதன்மேல் ஏறிக்கொண்டு வருகின்ற இவர் சிவபெருமானுடைய மூத்தபிள்ளையாகும், என்றார்கள். கயமுகன் அதனைக்கேட்டுக் கோபித்து, தேர்ப்பாகனை நோக்கி, நம்முடைய தேரை அந்த யானைமுகவனுக்கு முன்பு செலுத்துதி, என்ன, அவன் விநாயகக் கடவுளுக்கு முன்பு தேரைச் செலுத்தினான். கயமுகன் விநாயகக் கடவுளைக் கோபித்துப் பார்த்து, நெருப்புக் காலும்படி பற்களால் இதழை அதுக்கி, மைந்தனே, உன் பிதா யான் செய்த மகாதவத்தை நோக்கி எனக்குத்தந்த பெரிய வரத்தை நீ அறிகிலை, என்னெதிரே வந்தாய். நீ சிறிதும் மதியில்லாதவனோ, உன்னுயிரைக்கொண்டு உய்ந்துபோ. அன்றியும் நீ என்னோடு போர்செய்ய அமைந்தாயாயினும் உனக்கு என்னோடு போர்செய்யும் வலிமையில்லை. என்னோடு போர்செய்து இறந்தவரன்றி என்னை வென்றவர்

இவரென்று நீ சொல்ல வல்லையோ, தேவர்களாலும் மனிதர்களாலும் அவர்களுடைய ஆயுதங்களினாலும் நான் இறக்கமாட்டேன். இது நான் பெற்ற வரத்தினியல்பு. கேட்பாயாயின், நான் பெற்ற வரங்கள் இன்னும் பலவுள. என்னை வெல்பவர் யாவர், பாலகனே, நீ இந்திராதி தேவர்களுடைய துன்பத்தைத் தணிப்பவன்போல என்னுடன் போர்செய்ய வந்தாய். யான் உன்னை வென்று அவர்களுடைய உயிரையும் பருகுவேன். என்னோடு பொருது வெற்றிகொண்டு போகவல்லையாயின், வருதி, என்று கூறினான். சிவகுமாரர் அவனை அருளோடு நோக்கி, கயமுகனே முன்னாளிலே உனக்குப் பல வரங்களையும் படைகளையுந் தந்த நமது பிதாவே விரைவில் உன்னுயிரைக் கவர்ந்து இந்திரன் முதலியதேவர்களுடைய துன்பத்தை நீக்கி அவர்களுக்குப் பொன்னுலகைக் கொடுத்துவருவாய் என்று எமக்குங் கட்

டளையிட்டருளினார். உன்னுயிரைப் பாதுகாத்துக்கொள்
வாயாயின் நாம் ஒருறுதியைச்சொல்வோம், கேள். பொன்
னுலகத்தை இந்த இந்திரன் அரசு செய்யும்படி கொடுத்து,
நீ இம்மண்ணுலகத்தில் அரசு செய்திருக்குதி. அது
உனக்கு இசையாதாயின் நாம் உன்னுயிரை வதைபுரியும்
படி அமைந்து, நின்றேம், உன்னுடைய எண்ணம் யாது
சொல்லுதி, என்றார் என்னலும், கயமுகாசுரன் பொங்கி
அக்கினி சொரியப்பார்த்து, விரைந்து ஒரு பெரிய வில்லை
வளைத்து நாணேற்றிப் பாணங்களைப் பொழிந்தான். விநாய
கக்கடவுள் ஓர் எழுப்படையினால் அவற்றைச் சிந்தி, அவனு
டைய வில் முரிந்து வீழும்படி அதனால் அடித்தார். அவன்
மற்றொரு வில்லை வளைப்ப அதனையும் அழித்தார். கய
முகன் தன்வில் முரிதலும் ஒரு தண்டாயுதத்தை எடுத்துக்
கொண்டு சிவகுமாரரோடு எதிர்த்தான். அவர் அத்தண்டு

ஒடிந்து வீழும் வண்ணம் தமது எழுவினால் அடித்து, அவனுடைய மார்பிலும் அதனாற்புடைத்தார். அவன் ஒரு செயலுமின்றி மனம் நடுங்கி ஒன்றும் பேசாதவனாய் நாணத்தினாலொடுங்கி, இறந்தவன்போல நின்றான். விநாயகக்கடவுள் அவனுடைய நால்வகைச் சேனைகளையும் கொல்ல நினைத்து ஒரு பாசத்தை வீச அது அவனுடைய சேனைகளெல்லாவற்றையும் கட்டியது. அதன்பின் மழுப்படையைத்தூண்ட, அது அந்தச்சேனைகளைக்கொன்றது. தேவர்கள் மகிழ்ந்து கூத்தாடினார்கள். கயமுகாசுரன் பதைபதைத்து உயிர்த்து நொந்து தன் கையிலுள்ள படைக்கலங்கள் எல்லாவற்றையும் செலுத்தினான். அவைகள் யாவும் விநாயகக்கடவுளை வலஞ்செய்து துதித்து, அவருடைய ஏவலின் வழி நின்றன. கயமுகன் கோபாக்கினி மேன்மேலுஞ்சுட வாளாநின்றான். சிவகுமாரர் அவனை நோக்கி,

நாம் ஆயுதங்களை இவன்மேற்செலுத்தினால் நமது பிதாக் கொடுத்த வரத்தினால் அவைகள் ஒன்றும் இவனைக்கொல்ல மாட்டா; இனிச்செய்வதென்னை என்று இறைப்பொழுது சிந்தித்து தம்முடைய திருக்கோட்டி லொன்றைத் திருக்கரத்தால் முரித்துக் கயமுகன்மீது விடுத்தார். அது அவனுடைய மார்பைப்பிளந்து உடம்பைப் பூமியில் வீழ்த்தி, விரைந்துசென்று சுத்தோதக சமுத்திரத்தில் மூழ்கி அவருடைய திருக்கரத்தில் வந்து வீற்றிருந்தது. கயமுகன் மேகக்கூட்டங்கள் ஒருங்கே பூமியில் வீழ்ந்தாற் போலவும் கடலுடைந்தாற் போலவும் ஆர்த்துத் தேர்மேல் வீழ்ந்து மயங்கினான் அவனுடைய மார்பினின்றும் நதிகள் போலப் பெருகிய இரத்தவெள்ளம் பக்கத்திலுள்ள ஒரு காட்டிற் பரந்தமையால், அவ்விடம் திருச்செங்காடென்னும் பெயர் பெற்று இன்னும் யாவருங்காணும்படி இருக்கின்றது.

“பரமசிவனுடைய வரத்தினால் இறவாத கயமுகாசுரன் வீழ்ந்து இறந்தவன் போன்று பழைய வடிவைவிட்டு, ஒரு பெருச்சாளி வடிவங்கொண்டு, கோபாக்கினி கண்களிற் சிந்த, விநாயகக்கடவுளைத் தாக்கும்படி வந்தான். அவர் அவனுடைய போர்வலிமையை இல்லையாக்கி, அசலன் என்னும் பூதனுடைய தோளினின்றும் இழிந்து, நீ நம்மைச் சுமக்குதி. என்று அவனுடைய பிடரிற்றாவி வீற்றிருந்து, அந்த ஆகுவாகனத்தைச் செலுத்தியருளினார். அதனைக்கண்ட பிரமா இந்திரன் முதலிய தேவர்கள், கயமுகாசுரன் இறந்தான் நம்முடைய இடர்போயிற்று நம்முடைய பகையுந்தீர்ந்தது, என்று ஆடிப்பாடி, உத்தரீயங்களை வீசி. முகிலின் வரவைக்கண்ட மயிற்குழாங்கள் போலக்கூத்தாடி, விநாயகக்கடவுளுடைய திருமேனி மறையும் வண்ணம் பூமழைகளைப்பொழிந்து நின்று சிருட்டி

யாதி பஞ்சகிருத்தியங்களைச் செய்யும் முதற்கடவுள் தேவ
ரீரே அடியேங்களுடைய மிக்க மனத்துயரை நீக்கக்கருதி
யன்றோ இந்த அருட்டிருமேனி கொண்டீர். உம்மிடத்தி
லுண்டாகிய வேதமே உம்முடைய பெருந்தகைமை இன்ன
தென்றுணர்ந்ததில்லையானால், அடியேங்கள் உம்மை உணர்
வது எங்ஙனம், நமக்குப் பரமபிதாவும் மாதாவுமாயினீர்.
அதனால் மைந்தர்களாகிய யாங்கள் சொல்லும் புகழ்ச்சி
யை அன்போடு கேட்கின்றீர் போலும், என்று சொல்லி
வணங்கித் துதித்து, மலர்ந்த முகத்தினராய், மூத்தபிள்ளை
யாரை வந்து சூழ்ந்தார்கள். அக்கடவுள் அவர்கள யாவ
ருக்கும் கிருபாநோக்கத்தோடு பேரருள்புரிந்தார் பிரமா
முதலிய தேவர்கள், இனி நாம் உய்ந்தோம், என்று, அவ
ரைச்சூழ்ந்து நின்றார்கள். பிள்ளையார் கயமுகாசுரனுடைய
போரிலிறந்த பூதர்களை நோக்கி எழுதிர், என்று அருளிச்

செய்ய அவர்கள் யாவரும் எழுந்து, ஹர ஹரவென்று துதித்து அவரை வணங்கிச்சூழ்ந்தார்கள்.

இவைகள் எல்லாவற்றையும் அசுரேந்திரன் என்னும் அவுணராஜன் நன்ருய் அறிந்துகொண்டு மந்திரியாகிய சுக்கிரனேடு ஆலோசித்து, வருந்திப்புலம்பி, யான் இனித் தப்பியோடுவேன், என்றெண்ணி, இந்திரனுக்கும் பூதர் களுக்கும் அஞ்சி ஒரு பறவையாகி, மதங்கமாபுரியை நீங்கி, மேருமலைச்சாரலில் விருக்ஷங்கள் அடர்ந்த ஒரு முழைஞ் சிற் புகுந்து மறைந்திருந்தான், சுக்கிரனும் பறவைவடிவ மெடுத்துத் தன்னுடைய உலகத்தை அடைந்து, தவ மறைந்து அல்லவை செய்து வாழ்நாட் கழிப்பவர்போன்று யோகாப்பியாசஞ் செய்வான் போல வஞ்சனையோடிருந் தான். பூதர்கள் மதங்கமாபுரியிற் போய், ஆயுதபாணி களாயுள்ள அவுணர்கள் யாவரையுங் கொன்று, போர்க்

களத்துக்கு மீண்டு வந்தார்கள், பிள்ளையார் போர்க்களத்தை நீங்கித் திருச்செங்காட்டிற்போய், சிவலிங்கப் பிரதிட்டை செய்து பேரன்போடு பூசித்துத் துதித்தார் அந்த ஸ்தலத்தை மேலோர் கணபதீச்சரம் என்பர். விநாயகக் கடவுள் அதன்பின் ஆகுவாகனத்திலிவர்ந்து, தேவர்கள் சூழ விட்டுணு பாம்பினுருவாய்த் தவஞ்செய்து கொண்டிருந்த ஆலவனத்துக்கு எழுந்தருளினர்.

திருச்சிற்றம்பலம்.

அனந்தர் சாபம் நீங்கிய விபரம்.

விநாயகக்கடவுள் ஆலவனத்திற் சென்றபொழுது அங்கே ஓரால மரப்பொந்திலே சிவபெருமானுடைய திருவடிகளைத் தியானித்துத் தவஞ்செய்துகொண்டிருந்த விட்டுணு அவர் அங்கே வந்ததை அறிந்து, விரைவாக

அப்பொழுதே அவரை எதிர்கொண்டு சென்று தரிசித்துத் துதிப்ப, உமாதேவியார் சொல்லிய சாபம் நீங்குதலும், சக்கரம் முதலிய பஞ்சாயுதங்களையுமேந்தித் தம்முடைய பழைய உருவத்தைப் பெற்று மகிழ்ந்து, சிவபெருமானுடைய திருவருளை உன்னித் துதித்து, பராபரமாகிய சிவபெருமானுக்குப் பக்கத்திலுள்ளவராயும் ஓங்காரப் பொருளாயுமுள்ள உமாதேவியார் சொல்லிய சாபத்தைத் தொலைத்த முதல்வரே, நிருமலரே, தேவரீர் அடியேனுடைய பூசனையை ஏற்றருள் புரிதல் வேண்டும். அடியேன் அதனைச் செய்தற்கு அனுமதி தந்தருளுப், என்று பிரார்த்தித்தார் பிள்ளையார் அதனைக் கேட்டு, அவ்வாறு செய்குதி, என்று அருளிச்செய்து அங்கே வீற்றிருப்ப, விட்டுணு திருமஞ்சனம், சந்தனம் மாலை தூபதீபம் முதலிய உபகரணங்களைக் கொணர்ந்து, அவரைப் பூசித்து, பாயசான்

னமும் பலகார வகைகளும் நிவேதித்துத் தோத்திரஞ் செய்து, சுவாமீ மார்கழி மாசத்துப் பூர்வபக்கசட்டியாகிய இத்திதியிலே அடியேன் உம்மைப் பூசனை செய்ததுபோல யாவரும் உம்முடைய திருவடிகளையே சரணென்றுன்னிப் பூசனை செய்திடவும், அப்படிப் பூசிப்போருடைய துன்பங்களை யெல்லாம் தேவரீர் அன்றைக்கே நீக்கி அழியாத செல்தத்தை அவர்களுக்குக் கொடுத்திடவும் வேண்டும், இவ் வரத்தை அடியேனுக்குத் தந்தருளும் என்றார். விநாயகக் கடவுள், அவ்வாறாகுக, என்று விட்டுணுவுக்கு அருள் புரிந்து, உன் பூசையை மகிழ்ந்தோம், என்று கூறி, அந்த விட்டுணுவும் பிரமா முதலிய தேவர்களும் அன்போடு துதிப்ப ஆகுவாகனத்திலேறி, பூதகணங்கள் சூழத் திருக் கைலாச மலைக்குப்போய், பரமசிவனை வணங்கி அவருடைய திருவருளைப் பெற்று, அக்கோயில் வாயிலிலே தாமிருக்கும் இடத்தையடைந்தார்.

அற்றைநாளில் அரிபிரமேந்திராதி தேவர்கள் சிவ
சந்நிதானத்திற்போய் அன்போடு வணங்கி, அருள்பெற்று
நீங்கி, விநாயகக்கடவுளை வணங்கித் துதித்துத் திருமுன்
னிற்ப, அக்கடவுள் அருள்புரிந்தார். பின்பு அத்தேவர்கள்
அவர்மேல் வைத்த அன்பினால் பின்வருமாறு விண்ணப்பஞ்
செய்தார்கள், எம்பெருமானே, எங்களை வருத்திய கயமுகா
சுரனைத் தேவரீர் சங்கரித்தீர் அதனால் அடியேங்கள் உய்ந்
தோம். அதற்கு நாங்கள் உமக்குச் செய்யுங் கைம்மாறு
ஒன்றுமில்லை. ஆயினும், நேற்றைவரையும் அந்தக் கயமுகா
சுரனுக்கெதிரிலே தவறாமல் நாங்கள் செய்த தொண்டை
இன்று முதலாகத் தேவரீருடைய சந்நிதானத்திற் செய்
வோம், என்றார்கள். பிள்ளையார், அவ்வாறு செய்குதிர்,
என்றார். தேவர்கள் யாவரும் அன்பினோடு முட்டியாகப்
பிடித்த இரண்டு கைகளையும் கபித்தமாக்கித் தத்தந் தலை

களில் மும்முறைகுட்டி இரண்டு கைகளையும் எதிரெதிராகமாற்றி இரண்டு காதுகளையும் பிடித்துக்கொண்டு கணைக்காலுந் தொடையும் ஒன்றையொன்று தொடும்படி மும்முறை தாழ்ந்தெழுந்து வணங்கித் துதித்து நின்றார்கள். அதைப்பார்த்த பூதகணங்கள் ஆரவாரித்தார்கள். விநாயகக்கடவுள் மகிழ்சிறந்தார். தேவர்கள் அக்கடவுளை நோக்கி, இன்றுமுதல் உலகத்திலுள்ளோரெவரும் எங்களைப்போல இத்தொண்டைத் தேவரீருடைய சந்நிதானத்திற்செய்து வரும்படி அருள் செய்யவேண்டும் என்று வேண்ட அவர் அவ்வாறே ஆருக என்று அருள்புரிந்து அங்கு நின்ற அரிபிரமேந்திராதி தேவர்கள் யாவர்க்கும் விடைகொடுத் தனுப்பினர். அவர்கள் தத்தம் பதங்களிற் போய் மகிழ்ச்சி யோடிருந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

விநாயக சஷ்டி விபரம்.

விநாயக சஷ்டி என்பது. அனந்தர் (விஷ்ணு) சாபம் நீங்கிய தினமாகும். அத்தினம் மார்கழி மாதம் பூர்வபக்கத்து சஷ்டி திதி, அச்சுபதினத்தில் விநாயகரை அனந்தர் பூஜை செய்து தோத்திரம் பண்ணி சாப நிவர்த்தியானதும் இத்திதியிலே அடியேன் உம்மைப் பூஜைசெய்ததுபோல யாவரும் உம்மைப் பூசை செய்து துதிப்பவர்களுக்கு துன்பங்களை நீக்கி அழியாத செல்வத்தைக் கொடுத்தருளல் வேண்டும் என்றார். விநாயகக் கடவுள் அவ்வாறாகுக. உன் பூஜையை மகிழ்ந்தோம் என்று கூறினார். ஆதலால் சஷ்டி தினத்திலேயே பிள்ளையார் நோன்பை அனுஷ்டித்தல் வேண்டும். சதய நக்ஷத்திரம் சில காலங்களில் ஒன்று கூடும். அது பிரதானமல்ல.

சாஸ்திரங்களில் சதய நக்ஷத்திரத்தைச் சொல்லவேயில்லை. ஆகவே, மார்கழி மாதம் பூர்வ பக்கம் சஷ்டி திதியன்று பிள்ளையார் நோன்பு விரதத்தை அனுஷ்டிக்கவேண்டியது. இப்பிள்ளையார் நோன்பை. தனவணிக நகரத்தார்கள். தங்கள் குல தெய்வ விரதமாக அநுஷ்டித்து வருவது போற்று தர்க்கு உரியதாகும்.

விநாயகக்கடவுள் திருவடி சரணம்.

ஸ்லோகம்

சுக்லாம் பாதரம் விஷ்ணும் ஸஷிவர்ணம் ஸதுர்புஜம்
ப்ரஸன்ன வதனம் த்யாயேது ஸர்வ விக்நோப சாந்தயே.

மூஷிக வாஹந மோதக ஹஸ்த
சாமர கர்ண விளம்பித ஸூத்ர
வாமந ரூப மஹேஸ்வர புத்ர
விக்ந விநாயக பாத நமஸ்தே.

சோடச நாமங்கள்

ஓம் சுமுகாய நம
ஓம் ஏகதந்தாய நம
ஓம் கபிலாய நம
ஓம் கஜகர்ணிகாய நம
ஓம் லம்போதராய நம
ஓம் விகடாய நம
ஓம் விக்னராஜாய நம
ஓம் கணாதிபதியே நம

ஓம் தூமகேதுவே நம
ஓம் கணாதியக்ஷாய நம
ஓம் பாலசந்திராய நம
ஓம் கஜானனாய நம
ஓம் வக்ரதுண்டாய நம
ஓம் சூர்ப்பகர்ணாய நம
ஓம் ஹேரம்பாய நம
ஓம் ஸ்கந்தபூர்வஜாய நம

ஸ்ரீ சித்தி விநாயக மூர்த்தியே நமோ நம
நாநாவித மந்திர புஷ்பாணி ஸமர்ப்பயாமி.

உ

சிவமயம்.

ஔவையார் அருளிச்செய்த

விநாயகர் அகவலின் வரலாறு.

ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனருடனே கைலாயத்துக்குப் பரமசிவனுடைய சந்நிதானத்தில் ஆதியுலா அரங்கேற்றஞ் செய்தற்கு எழுந்தருளும் சேரமான் பெருமாள் நாயனர் ஔவையாரை அழையாமல் வந்து விட்டோமே என்று நினைத்தார். அது இச் 'சீதக்களப' என்கிற அகவலைக் கொண்டு விநாயகரைப் பூசித்துக்கொண்டிருந்த ஔவையாருக்குத்தெரிந்து தானும் அவர்களுடனே கைலாயத்திற்குப் போகவேண்டுமென்ற விருப்பங்கொண்டு துரிதமாகப் பூசை செய்தனர். அதைக்கண்ட விநாயகர் ஔவையாரைப்

பார்த்து ஔவையே! நீ கிரமப்படி பூசைசெய் அவர்களுக்கு முன்னதாகவே உன்னை கைலாயத்தில் சேர்ப்பிக்கிறேன்' என்றுசொல்ல அவ்வாறே ஔவையார் பூஜை செய்து முடித்தனர். உடனே விநாயகக்கடவுள் தமது துதிக்கை யாலெடுத்துவிடக் கைலாயத்தை அடைந்தனர் பின்பு வந்து சேர்ந்த சேரமான் பெருமாள் நாயனாரும் ஔவையாரைக் கண்டு அதிசயப்பட்டார். அச்சமயத்தில் ஔவையார்:—

கட்டளைக் கலித்துறை.

மதுரமொழிநல் லுமையாள் புதல்வன் மலர்ப்பதத்தை
முதிர நினையவல்லார்க்கரிதோ முகில்போல் முழங்கி
அதிர நடந்திடும் யானையுந் தேரும் அதன்பின்வரும்
குதிரையுங் காதங் கிழவியுங் காதங் குலமன்னனே.

உ

கணபதி துணை.

ஔவையார் அருளிச்செய்த

விநாயகர் அகவல்.

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பும் பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமு மங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்

நான்ற வாயு நாலிரு புயமும்
மூன்று கண்ணு மும்மதச் சுவடும்
இரண்டு செவியு மிலங்குபொன் முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புத நின்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரு மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் னுளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திரமிது பொருளென

வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா வுபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐப்புலன் றன்னை யடக்கு முபாயம்
இன்புறு கருணை யினிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்குங் கருத்தினை யறிவித்
திருவினை தன்னை யறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயி லொருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை யடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே

இடையிங் கலையி னெழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பி னாவி லுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையு மாதித்த னியக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தி னீரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தி னுறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்குமமும்
எண்முக மாக வினிதெனக் கருளிப்

புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக் கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கு மனமு மில்லா மனோலயம்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்
திருள்வெளி யிரண்டுக் கொன்றிட மென்ன
அருடரு மானந்தத் தழுத்தியென் செவியில்
எல்லை யில்லா வானந்த மளித்து
அல்லல் களைந்தே யருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி

அணுவிற் கணுவா யப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமு நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தி னரும்பொரு டன்னை
நெஞ்சக் கருத்தி னிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

ஔவையார் அருளிச்செய்த
விநாயகர் அகவல்
முற்றிற்று.

உ

கணபதி துணை.

அருணகிரிநாதர் அருளிச்செய்த

முத்திவிநாயகர் அகவல்

காப்பு

வெண்பா

நமாமி நமாமி நமஸ்து நமஸ்து
நமாமி நமாமி நமஸ்து—நமாமி யெங்கள்
அய்யா சிவன் புதல்வா யங்குசபா சந்துலங்கும்
கையா கணநாயகா.

முத்தி விநாயக ரகவல்

அரகர சிவசிவ நமோ நமோ
ஆகுவா கனனே நமோ நமோ
இபமுகத் தோனே நமோ நமோ
ஈச்சுரன் மகனே நமோ நமோ
உமையாள் சுதனே நமோ நமோ
ஊனிற் பிரியாய் நமோ நமோ
எமையாள் பவனே நமோ நமோ
ஏழைபங் காளாய் நமோ நமோ
ஐயா துய்யாய் நமோ நமோ
ஒற்றை மருப்பாய் நமோ நமோ
ஓதிய மறையே நமோ நமோ
ஔவைக் கினியாய் நமோ நமோ
அஃகாப் பொருளே நமோ நமோ

கணநா யகனே நமோ நமோ
காரணப் பொருளே நமோ நமோ
கிருபைக் கடலே நமோ நமோ
கீதகிண் கிணியாய் நமோ நமோ
குஞ்சரக் கன்றே நமோ நமோ
.கூறும் பரனே நமோ நமோ
கெதியளிப் பவனே நமோ நமோ
கேள்வி விசாலா நமோ நமோ
கையைக் தவனே நமோ நமோ
கொழுந்திடு முதலே நமோ நமோ
கோவே தேவே நமோ நமோ
கௌவைத் துணையே நமோ நமோ
சதுர்மறைப் பொருளே நமோ நமோ
சாய்மறைச் செவியாய் நமோ நமோ

சிவன்கண் மணியே நமோ நமோ
சீவசஞ் சிதமே நமோ நமோ
சுருதி விளக்கே நமோ நமோ
சூரசங் காரா நமோ நமோ
ஜெயஜெய விநாயகா நமோ நமோ
சேய்நூற் கரசே நமோ நமோ
சைவக் குருவே நமோ நமோ
சொல்லும் பொருளே நமோ நமோ
சோக விநாசா நமோ நமோ
சௌரியக் களிறே நமோ நமோ
தண்டைக் காலாய் நமோ நமோ
தாமரைக் கரத்தாய் நமோ நமோ
திருமால் மருகா நமோ நமோ
தீங்குதீர்ப் பவனே நமோ நமோ

தும்பிக் கையாய் நமோ நமோ
தூலரூக் குமத்தோய் நமோ நமோ
தெய்வ சிகாமணி நமோ நமோ
தேவர்கள் தேவே நமோ நமோ
தையல்வல் லபையாய் நமோ நமோ
தொண்டர்க் கிதமே நமோ நமோ
தோத்திரப் பிரியாய் நமோ நமோ
தௌவைதீர்ப் பவனே நமோ நமோ
நம்புந் துணையே நமோ நமோ
நாகபூ ஷணனே நமோ நமோ
நித்தன் மதலாய் நமோ நமோ
நீறணி பவனே நமோ நமோ
நுகருமா யமுதே நமோ நமோ
நூறுப் பேரே நமோ நமோ

நெற்றிக் கண்ணாய் நமோ நமோ
நேமியந் திரத்தாய் நமோ நமோ
நைவளந் துரந்தோய் நமோ நமோ
நொந்தார்க் காவாய் நமோ நமோ
நோய்தீர்ப் பவனே நமோ நமோ
நௌவி தரித்தோய் நமோ நமோ
பதினொரு கையாய் நமோ நமோ
பாவ வினாசா நமோ நமோ
பிணிக்கு மருந்தே நமோ நமோ
பிடைதீர்ப் பவனே நமோ நமோ
புத்திதந் தவனே நமோ நமோ
பூமகள் மருகா நமோ நமோ
பெற்றோர் மகிழே நமோ நமோ
பேழை வயிற்றாய் நமோ நமோ

பையர வணிந்தாய் நமோ நமோ
பொன்றாக் குன்றே நமோ நமோ
போதப் பொருளே நமோ நமோ
பௌவ வணத்தோய் நமோ நமோ
மதியணிப் பவனே நமோ நமோ
மாதையில் வாழ்வே நமோ நமோ
மிதியா னவனே நமோ நமோ
மீதோர் வேந்தே நமோ நமோ
முக்கண் ணுடையாய் நமோ நமோ
மூவரின் முதலாய் நமோ நமோ
மெய்ப்பொருட் கிரியே நமோ நமோ
மேலாம் பதமே நமோ நமோ
மைதிற மணியே நமோ நமோ
மொழிவோர்க் கருளே நமோ நமோ
மோதகக் கையாய் நமோ நமோ
மௌலி தரித்தோய் நமோ நமோ

வல்லபை மணாளா நமோ நமோ
வாமன ரூபா நமோ நமோ
வித்தைக் கிறைவா நமோ நமோ
விரதன் டையனே நமோ நமோ
உத்தம தேவே நமோ நமோ
ஊனந் துரப்பாய் நமோ நமோ
வெயிலவற் கினியாய் நமோ நமோ
வேண்டி விநாயகா நமோ நமோ
வையம் புரந்தோய் நமோ நமோ
ஒப்பிலா மணியே நமோ நமோ
ஓம்பொரு ளாளா நமோ நமோ
வெளதற் பரனே நமோ நமோ
மஹாகண பதியே நமோ நமோ.

அருணகிரிநாதர் அருளிச்செய்த

முத்திவிநாயகர் அகவல்

முற்றிற்று.

உ

கணபதி துணை

நக்கீரதேவர் அருளிச்செய்த

வினாயகர் திருவகவல்

சீர்தரு மூலச் செழுஞ்சுடர் விளக்கே
கார்நிற மேனிக் கற்பகக் களிறே
அல்லல் வினையை யறுத்திடு ஞான
வல்லபை தன்னை மருவிய மார்பா
பொங்கர வணிந்த புண்ணிய மூர்த்தி
சங்கர னருளிய சற்குரு விநாயகா
ஏழை யடியே னிருவிழி காண
வேழ முகமும் வெண்பிறைக் கோடும்
பெருகிய செவியும் பேழை வயிறும்

திருவளர் நுதலில் திருநீற் றழகும்
சிறந்த கண்ணுஞ் சீதளப் பார்வையும்
நறுந்திகழ் நாசியும் நான்மலர்ப் பாதமும்
நவமணி மகுட நன்மலர் முடியும்
கவச குண்டல காந்தியும் விளங்கச்
சிந்தூரத் திலதச் சந்தனப் பொட்டும்
ஐந்து கரத்தி னழகும்வீற் றிருக்க
பாச வினையைப் பறித்திடு மங்குச
பாசத் தொளியும் பன்மணி மார்பும்
பொன்னா பரணமும் பொருந்துமுந் நூலும்
மின்னா மெனவே விளங்குபட் டழகும்
உந்திச் சுழியும் உரோமத் தழகும்
தொந்தி வயிறுந் துதிக்கையுந் தோன்ற
வேதனு மாலும் விமலனு மறியாப்

பாதச் சலங்கைப் பலதொனி யார்ப்பத்
தண்டைச் சிலம்புந் தங்கக் கொலுசும்
எண்டிசை மண்டல மெங்கு முழங்கத்
தொகுது துந்துமி தொந்தோ மெனவே
தகுகு திந்திமி தாள முழங்க
ஆடிய பாத மண்டர்கள் போற்ற
நாடி மெய் யடியார் நாளுந் துதிக்கக்
கருணை புரிந்து காக்ஷிதந் தருள
இருளைக் கடிந்து எங்கும் நிறையப்
பொங்குபே ரொளியாய்ப் பொன்மலை போலத்
திங்கள் முடியான் றிருவுள மகிழ
வந்த வாரண வடிவையுங் காட்டிச்
சிந்தை தளர்ந்த சீரடி யார்க்கு
இகபர சாதன மீண்டு முதவி

அகவினைத் துன்ப மகன்றை யறுத்து
மூலா தார முச்சுடர் காட்டி
வாலாம் பிகைதன் வடிவையுங் காட்டி
மாணிக்க மேனி மலர்ப்பதங் காட்டிப்
பேணிப் பணியப் பீஜா க்ஷரமும்
ஓமென் றுதித்த ஓங்காரத் துள்ளே
ஆமென் றெழுந்த அக்ஷர வடிவும்
இடைபிங் கலைக ளிரண்டி னடுவே
கடைமுனை சுழிமுனைக் கபாலமுங் குறித்து
மண்டல மூன்றும் வாய்வோர் பத்துங்
குண்டலி யசைவிலி கூறிய நாடியும்
பூதமும் பொறியும் புகழ்குண மூன்றும்
வாதனை செய்யு மறிவையும் காட்டி
ஆறு தார அங்குச நிலையைப்

பேருகி நின்ற பெருமையுங் காட்டிப்
பஞ்ச மூர்த்திகள் பாகத் தமர்ந்த
பஞ்சசத் திகளின் பாதமும் காட்டி
நவ்விட மௌவும் நடுவணை வீட்டில்
அவ்வு மாக்கினை அனாதி சதாசிவம்
மைவிழி ஞான மனோன்மணி பாதமும்
நைவினை நணுகா நாத கீதமும்
கண்டு வணங்கக் கண்ணைத் திறந்து
விண்டல மான வெளியையுங் காட்டி
ஐம்பத் தோரெழுத் தக்ஷர நிலையை
இன்பச் சக்கர விதிதனைக் காட்டி
புருவ நடுவணைப் பொற்கம லாசனன்
திருவிளை யாடலின் திருவடி காட்டி
நாதமும் விந்தும் நடுநிலை காட்டி

போத நிறைந்த பூரணங் காட்டி
உச்சி வெளிதனி லுள்ளொளி காட்டி
வச்சிரம் பச்சை மரகத முத்துப்
பவள நிறைந்த பளிங்கொளி காட்டிச்
சிவகயி லாசச் சேர்வையுங் காட்டிச்
சத்தம் பிறந்த தலத்தையுங் காட்டிச்
தத்துவந் தொண்ணூற் றாறையு நீக்கிக்
கருவி கரணக் களங்க மறுத்து
மருவிய பிறவி மாயையை நீக்கி
உம்பர்கள் ரிஷிகள் ஒருவருங் காணா
அம்பர வெளியி னருளையுங் காட்டிச்
சத்தி பராபரை சதானந்தி நிராமய
நித்திய ரூபி நிலைமையுங் காட்டி
அடியவர் ஞான மமிர்தமா யுண்ணும்

வடிவை யறியும் வழிதனைக் காட்டி
நாசி நுனியில் நடக்குங் கலைகள்
வாசிவா வென்று வாங்கிப் பிடித்து
நின்மல வடிவாய் நிறிவித் தப்புறம்
வின்மய மான விதத்தையுங் காட்டித்
தராதல முழுதுந் தாளுய் நிறைந்த
பராபர வெளியைப் பணிந்திடக் காட்டி
என்னுட லாவி யிடம்பொரு ளியாவுந்
தன்னுடை வசமாந் தவனிலை காட்டி
நானெனு மாணவம் நாசம தாகத்
தானென வந்து தயக்கந் தீர
ஆன குருவா யாட்கொண்டருளி
மோன ஞான முழுது மளித்துச்
சிற்பரி பூரண சிவத்தைக் காண

நற்சிவ நிஷ்கள நாட்டமுந் தந்து
குருவுஞ் சீஷனுங் கூடிக் கலந்து
இருவரு மொருதனி இடந்தனிற் சேர்ந்து
தானந்த மாகித் தற்பர வெளியில்
ஆனந்த போத அறிவைக் கலந்து
புவனத் தொழிலைப் பொய்யென் றுணர்ந்து
மவுன முத்திரையை மனத்தினி லிருத்திப்
பெண்டு பிள்ளை பண்டு பதார்த்தங்
கண்டது மாயைக் கனவெனக் காட்டிப்
பாச பந்தப் பவக்கடல் நீக்கி
ஈச னிணையடி யிருத்தி மனத்தே
நீயே நானாய் நானே நீயாய்க்
காயா புரியைக் கனவென வுணர்ந்து
எல்லா முன்செய லென்றே யுணர

நல்லா யுன்னருள் நாட்டந் தருவாய்
காரண குருவே கற்பகக் களிறே
வாரண முகத்து வள்ளலே போற்றி
நித்திய பூஜை நைவேத் தியமும்
பத்தியாய்க் கொடுத்தேன் பரமனே போற்றி
எத்தி யனுதின மெளியேன் பணியக்
கூற்றினை யுதைத்த குளிர்பதந் தந்து
ஆசு மதுர வமிர்த மளித்துப்
பேசு ஞானப் பேரெனக் கருளி
மனத்தில் நினைத்த மதுர வாசகம்
நினைவினுங் கனவிலும் நேசம் பொருந்தி
அருண கிரியா ரவ்வை போலக்
கருத்து மிகுந்து கவிமழை பொழிய
வாக்குக் கெட்டா வாழ்வை யளித்து

நோக்கரு ஞான நோக்கு மளித்து
இல்லற வாழ்வை யிடையூ றகற்றிப்
புல்ல ரிடத்திற் புகுந்துழ லாமல்
ஏற்ப திகழ்ச்சி என்ப தகற்றிக்
காப்ப துனக்குக் கடன்கண் டாயே
நல்வினை தீவினை நாடி வருகினுஞ்
செல்வினை யெல்லாஞ் செயலுன தாமால்
தந்தையும் நீயே தாயும் நீயே
எந்தையும் நீயே ஈசனும் நீயே
போத ஞானப் பொருளும் நீயே
நாதமும் நீயே நான்மறை நீயே
அரியும் நீயே அயனும் நீயே
திரிபுர தகனஞ் செய்தவன் நீயே
சத்தியும் நீயே சதாசிவம் நீயே

புத்தியும் நீயே புராந்தகன் நீயே
பத்தியும் நீயே பந்தமும் நீயே
முத்தியும் நீயே மோட்சமும் நீயே
ஏகமும் நீயே என்னுயிர் நீயே
தேகமும் நீயே தேவனும் நீயே
உன்னரு ளன்றி * உயிர்த்துணை காணேன்
பின்னொரு தெய்வம் பேசவு மறியேன்
வேதனை கொடுத்த மெய்யிது தன்னில்
வாத பித்தம் வருத்திடு சிலேத்துமம்
மூன்று நாடியும் முக்குண மாகித்
தோன்றும் வினையின் துன்ப மறுத்து
நாலா யிரத்துநா னூற்றுநாற் பத்தெண்
மேலாம் வினையை மெலியக் களைந்து
அஞ்சா நிலைமை யருளிய நித்தன்

பஞ்சா க்ஷரநிலை பாலித் தெனக்குச்
செல்வமுங் கல்வியும் சீரும் பெருக
நல்வர மேதரும் நான்மறை விநாயகா
சத்திய வாக்குச் சத்தா யுதவிப்
புத்திர னேதரும் புண்ணிய முதலே
வெண்ணீ றணியும் விமலன் புதல்வா
பெண்ணு முமையாள் பெற்றிடுந் தேவே
அரிதிரு மருகா அறுமுகன் றுணைவா
கரிமுக வாரணக் கணபதி சரணம்
குருவே சரணம் குணமே சரணம்
பெருவயிற் றோனே பொற்றாள் சரணம்
கண்ணே மணியே கதியே சரணம்
விண்ணே யொளியே வேந்தே சரணம்
மானத வாவி மலர்த்தடத் தருகில்

தானத்தில் வாழும் தற்பரா சரணம்
உச்சிப் புருவத் துதித்துல களிக்குஞ்
சச்சிதா னந்த சற்குரு சரணம்
விக்கிந விநாயகா தேவே ஓம்
ஹரஹர ஷண்முக பவனே ஓம்
சிவசிவ மஹாதேவ சம்போ ஓம்.

நற்கிரதேவர் அருளிச்செய்த

விநாயகர் திருவகவல்
முற்றிற்று.

வெண்பா

அல்லல்போம் வல்வினைபோம் அன்னைவயிற் றிற்பிறந்த
தொல்லைபோம் போகாத் துயரம்போம்—நல்ல
குணமதிக மாமருணைக் கோபுரத்தில் வீற்றிருக்குங்
கணபதியைக் கைதொழுதக் கால்.

வஞ்சி விருத்தம்

கணபதி யென்றிடக் கலங்கும் வல்வினை
கணபதி யென்றிடக் காலனும் கைதொழும்
கணபதி யென்றிடக் கரும மாதலால்
கணபதி யென்றிடக் கவலை தீருமே.

திருச்சிற்றம்பலம்.

விநாயகக்கடவுள் திருவடி சரணம்.

வெண்பா.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணிவிப்பான்—விநாயகனே
விண்ணிற்கு மண்ணிற்கு நாதனுமாம் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

"மோகமெனுங் கடல்கடந்து முத்தியெனும்
கரைகாண்பான் முதிர்ந்தநாலாம்
பாகமெனும் மலர்கொண்டு பக்தியெனும்
புனலாட்டிப் பரிந்துசாத்திச்
சோகமெனப் பாவித்துத் துரியமெனும்
விளக்கேற்றிச் சோக நீங்கி
யாகமெனும் கோயிலின்கண் ணறிவென்னுங்
கணபதிக்கே யன்புசெய்வாம்."

பொன்னிமயப் பிடியானை தருமானை
முகத்தானைப் பொருவிலானைச்
சொன்னயஞ்சேர் தாரகத்தி னுருவானை
யின்பருளச் சோதியானைச்
சென்னியிலா றுடையானைத் தந்தையெனப்
படைத்தானைத் திகழோராறு
மன்னு முகன்றுணையானை வல்லபை
யின்பத்தானை வணங்கி வாழ்வாம்.

ஸ்ரீ ஸ்கந்த கணேச உமா மஹேஸ்வரர் திருவடி சரணம்

சுபம்! சுபம்!! சுபம்!!!

சந்திரவிலாஸ் பிஞ்சராபோல் பிரஸ்,
241, பெரியகடைவீதி, திருச்சினப்பள்ளி.